ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2251/48 - 2021 ඔක්තෝබර් මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.10.28
*2251/48 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம்

*1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சட்டத்தின், 1981 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின், 1993 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தின், 1995 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க மற்றும் 1996 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கம் ஆகிய சட்டங்களினால் குறிப்பிடப்பட்ட (464 ஆவது அத்தியாயம்) காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 155 மற்றும் 156 ஆவது பிரிவின் கீழ் காணி அமைச்சரினால் சட்டமாக்கப்படுகின்ற ஒழுங்கு விதிகள்.*

**எஸ். எம். சந்திரசேன,**
*காணி அமைச்சர்.*

*காணி அமைச்சு,*
*கொழும்பு,*
*2021, ஒற்றோபர் 25.*

**ஒழுங்கு விதிகள்**

1. இந்த ஒழுங்கு விதிகள் 2021, காணி அபிவிருத்தி ஒழுங்குவிதிகள் என அறியப்படும்.

2. கட்டளைச் சட்டத்தின் 25 ஆவது பிரிவின் கீழ் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரம் மற்றும் கட்டளைச் சட்டத்தின் 27 ஆவது பிரிவின் கீழ் வழங்கப்படுகின்ற அளிப்புப்பத்திரத்தின் நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அதிகுறைந்த உப பிரிவிடல் அலகு பின்வருமாறு திருத்தப்படுகிறது.

   I. மேட்டுக் காணி - குறித்த காணி அமைந்துள்ள உள்ளூராட்சி மன்றத்தின் அதிகார எல்லைக்குள் அதிகுறைந்த உபபிரிவிடல் அலகு.

   II. நீர்ப்பாசன வசதிகள் கொண்ட காணி - 1 ஏக்கர்.


இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

III. வர்த்தகப் பயிர்ச்செய்கைக்கு கையுதிர்த்தல் செய்துள்ள காணி - 1 ஏக்கர்.

IV. மத்திய வகுப்பினருக்கான காணி - 2 1/2 ஏக்கர்.

V. வான் மழையினால் பயிர் செய்யப்பட்ட காணி - 1 ஏக்கர்.

3. இந்தத் திருத்தப்பட்ட உபபிரிவிடல் அலகுகள் ஒத்தவாறு அதிகுறைந்த பங்கு தீர்மானிக்கப்படல் வேண்டும்.

4. ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் /அளிப்புப் பத்திரத்தில் அதிகுறைந்த உபபிரிவிடல் அலகு மற்றும் அதிகுறைந்த பங்கு ஆகியவற்றைத் திருத்துவதற்கு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் போது பிரதேச செயலாளரினால் அனுமதிப் பத்திரம் / அளிப்புப் பத்திரத்தில் ஒப்பமிட்டு புறக்குறிப்பு இடுவதன் மூலம் அந்தத் திருத்தத்தை செய்ய முடியும். அந்தப் புறக்குறிப்புப் படிவம் 'அ' ஏற்புடைத்ததாக இருக்க வேண்டும்.

5. அளிப்புப் பத்திரம் மூலம் வழங்கப்பட்டுள்ள காணி அல்லது அதன் ஒரு பகுதி எழுத்திலான முன் அனுமதியுடன் நொத்தாரிஸ் உறுதி மூலம் கையுதிர்த்தல் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், அந்த நொத்தாரிஸ் உறுதியில் குறைந்த உப பிரிவிடல் அலகு மற்றும் அதிகுறைந்த பங்கு என்பவற்றைத் திருத்துவதற்கு விண்ணப்பம் கிடைக்கும் போது மேலே ஒழுங்கு விதி 4 ஏற்றவாறு செயற்பட வேண்டும். அதில் இடப்படும் புறக்குறிப்பு "ஆ" படிவத்திற்கமைய இருத்தல் வேண்டும்.

## படிவம் 'அ'

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரம் /அளிப்புப் பத்திரங்களின் அதிகுறைந்த உப பிரிவிடல் அலகு மற்றும் அதிகுறைந்த பங்கு என்பற்றை திருத்தம் செய்தல்.**

.................................. மாவட்டத்தின் .................................. பிரதேசச் செயலாளர் பிரிவின் .................................... கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள .................................... ஆம் இலக்க வரைப்படம் /........................................... ஆம் இலக்கப் படத்தில் ..................... ஹெக்டயார் /ஏக்கர் ............................. ரூட் .............................. பேர்ச் .................................... பரப்பளவைக் கொண்ட, காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள .......................... ஆம் இலக்க அனுமதிப் பத்திரம் /அளிப்புப் பத்திரங்களின் அதிகுறைந்த உப பிரிவிடல் அலகு ......................... ஹெக்டயார் /ஏக்கர் .............................. ரூட் ............................... பேர்ச் .................................. எனவும் அதிகுறைந்த பங்கு ................. எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அதிகுறைந்த பிரிவிடல் அலகு மற்றும் அதிகுறைந்த பங்கு, கீழ் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தம் செய்வதற்கு என்னுடைய அனுமதியை வழங்குகிறேன்.

1. அதிகுறைந்த உப பிரிவிடல் அலகு
   ........................ ஹெக்டயார் / ஏக்கர் ........................ ரூட் .................... பேர்ச் ........................

2. அதிகுறைந்த பங்கு .................................. ஆகும்.

..................................................................................................................

பிரதேசச் செயலாளர் அனுமதிப்பத்திரகாரர் /அனுமதிப்பத்திரகாரர்கள்

திகதி ........................................ திகதி ..........................................

## படிவம் 'ஆ'

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரம் நொத்தாரிஸ் உறுதி மூலம் கையுதிர்தல் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில், அதிகுறைந்த உப பிரிவிடல் அலகு மற்றும் அதி குறைந்த பங்கு என்பற்றை திருத்தம் செய்தல்.**

.................................. மாவட்டத்தைச் சேர்ந்த ................................ பிரதேசச் செயலாளர் பிரிவின் .................................. கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள .................................... ஆம் இலக்க வரைப்படம் /ஆம் இலக்கப் படத்தில் ................................... ஹெக்டயார் / ஏக்கர் .............................. ரூட் ............................... பேர்ச் .................................... கொண்ட காணித் துண்டுக்கு, காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள ........................... ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தில் அதிகுறைந்த உப பிரிவிடல் அலகு ......................... ஹெக்டயார் /ஏக்கர் ............................. ரூட் .............................. பேர்ச் ................................... எனவும் அதி குறைந்த பங்கு ............................ எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த அளிப்புப் பத்திரம் மூலம் சாட்டுதல் செய்யப்பட்ட முழுக் காணி /காணியிலிருந்து ஹெக்டயார் /ஏக்கர் .............................. ரூட் ............................... பேர்ச் ................................... பரப்பளவை என்னுடைய ........................... இலக்க மற்றும் திகதி கடிதம் மூலம் ........................................................................................................ முகவரியைச் சேர்ந்த ............................................................................ என்பவருக்குக் கையுதிர்த்தல் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், இந்த அனுமதியின் அடிப்படையில் பிரசித்த நொத்தாரிஸ் .......................................................... என்பவரால் எழுதி உறுதி செய்யப்பட்ட .......................... இலக்க நொத்தாரிஸ் உறுதியின் மூலமாக கையுதிர்த்தல் செய்யப்பட்டுள்ளது. அந்த நொத்தாரிஸ் உறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகுறைந்த பிரிவிடல் அலகு மற்றும் அதிகுறைந்த பங்கு, என்பவற்றைக் கீழ்க்கண்டவாறு திருத்தம் செய்வதற்கு என்னுடைய அனுமதியை வழங்குகிறேன்.

1. அதிகுறைந்த உப பிரிவிடல் அலகு
   ......................... ஹெக்டயார் / ஏக்கர் ......................... ரூட் .................... பேர்ச் ........................

2. அதிகுறைந்த பங்கு .................................. ஆகும்.

...................................................... ..........................................................

*11- 221*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.